**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.38 /2018 |
| Police Station | : DCB - P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.2 / P.W.2 |
| Name | : செந்தில்முருகன் |
| Father Name/Husband Name | : ராதாகிருஷ்ணன் |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 06.02.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

1 , 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதன்மை விசாரணை</u>

**01.** நான் தற்போது புதுப்பேட்டையில் வசித்து வருகிறேன். ஏ.சி மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 அறிவழகன் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். நான் சென்னையில் ஏ.சி மெக்கானிக்காக வேலை செய்து வந்தேன். அப்போது பணக்கஷ்டம் இருந்ததால் வெளிநாடு செல்வதாக இருந்தேன். டி.வி-யில் ஏ.சி மெக்கானிக் வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரம் பார்த்தேன். பி.ஆர்.ஜி என்டர்பிரைசஸ் கடலூரில் கூத்தப்பாக்கத்தில் உள்ள நிறுவனம் வேலை வாங்கி தருவதாக சொன்னதால் வனிதாதேவி என்பவரை நேரில் பார்க்க சென்றேன்.

**02.** அப்போது கனடா செல்வதற்கு ரூ,1,60,000/- பணம் கட்டவேண்டும் என்று சொன்னார்கள். முன்பணமாக ரூ.25,000/- வனிதாதேவியிடம் கொடுத்தேன். 2, 3 மாதங்கள் கழித்து ரூ.1,10,000/- ஐ புதுப்பேட்டை ஸ்டேட் வங்கி மூலமாக வனிதாதேவியின் 4619 என்ற கடைசி எண் கொண்ட வங்கி கணக்கில் செலுத்தினேன். 28.10.2011 அன்று ரூ.1,10,000/-ஐ 3 தொகையாக ரூ.40,000/-, ரூ.40,000/-, ரூ.20,000/- என்று செலுத்தினேன். மேலும் 22.01.2013 அன்று ரூ.10,000/- செலுத்தினேன். அதற்கு பிறகு வனிதாதேவிக்கு போன் செய்தபோது அவருடைய போன் switch off என்று வந்தது. அவரிடம் நான் என்னுடைய கடவுச்சீட்டு மற்றும் பணத்தினை வெளிநாடு செல்வதற்காக கொடுத்தேன்.

**03.** வனிதாதேவி என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு passport எனக்கு வாங்கி கொடுக்கவில்லை. நான் அவர் வீட்டில் சென்று பார்த்தேன். அப்போது அவர் மேலும் ரூ.10,000/- கொடுத்தால் வெளிநாடு செல்வதற்கு விசா வாங்கித்தருவதாக கூறினார். அதன் அடிப்படையில் நான் ரூ.10,000/- ஐ 22.01.2013 அன்று கொடுத்தேன். பிறகும்

எனக்கு வெளிநாடு செல்ல விசா வரவில்லை. நான் சென்று பார்த்தபோது வீடு பூட்டப்பட்டிருந்தது. நான் அவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பிறகு தான் அவர் நிறைய நபர்களிடம் பணம் வாங்கி ஏமாற்றிய விவரம் தெரிந்தது. இது சம்மந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போது போலிசாரிடம் நான் வங்கியில் பணம் செலுத்திய ஆவணங்களை அவர்களிடம் கொடுத்தேன். (சாட்சி அழுதுக்கொண்டே சாட்சியம் அளித்தார்). வனிதாதேவியுடன் வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை.

**(00000031596514619 என்ற கணக்கு எண் கொண்ட வங்கிக்கணக்கில் ரூ.40,000/-, ரூ.40,000/-, ரூ.20,000/- டெபாசிட் செய்ததற்கான ஸ்டேட்மெண்ட் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**04.** உங்கள் உறவினர் RDO அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. 1வது எதிரியிடம் வெளிநாடு செல்வதற்காக கேட்டபோது விண்ணப்பம் ஏதேனும் பூர்த்தி செய்து கொடுத்தீர்களா என்றால் இல்லை. நான் எதிரியிடம் கேட்டபோது வெளிநாடு செல்வதற்கான நடைமுறைகள் பற்றி என்னிடம் சொன்னார்கள். ஒரு மாதம் சென்னையில் படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக சென்னயைில் சென்று படித்து தேர்ச்சியும் பெற்றேன். நீங்கள் வெளிநாடு செல்லவேண்டும் என்றால் மெடிக்கல் பிட்னஸ் தேவை என்றால் சரிதான். விசா வந்த பிறகு தான் மெடிக்கல் பிட்னஸ் கேட்பார்கள்.

**05.** ைஹதராபாத்தில் அல்லாமகேஷ் மற்றும் அவரது உறவினர் மைக்கேல் ஆகிய இருவரும் நடத்தி வந்த ஏஜென்சி மூலமாகத்தான் உங்களை வெளிநாடு அனுப்புவதாக சொன்னார்கள் என்றால் அப்படி எதுவும் சொல்லவில்லை. ரூ.25,000/- பணத்தை 1-ம் எதிரியின் கணக்கில் அனுப்பி விட்டு மீதி தொகையை அல்லாமகேஷ், ஆக்சிஸ் வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு எதிரி சொன்னதற்கு நீங்கள் நான் உங்கள் கணக்கிலேயே அனுப்பிவிடுகிறேன் நீங்கள் அல்லாமகேஷ் கணக்கிற்கு அனுப்பிவிடுங்கள் என்று சொன்னீர்கள் என்றால் சரிதான்.

**06.** என் தம்பியின் கணக்கிலிருந்து தம்பிதான் பணத்தை அனுப்பினார். என் தம்பி பணத்தை அனுப்பும்போது நான் உடனில்லை. எனக்கு பணி கன்பர்மேஷன் லட்டர் எதுவும் வரவில்லை. நான் அனுப்பிய பாஸ்போட்டை 1ம் எதிரி அல்லாமகேஷ் என்பவருக்கு மெயில் மூலமாக அனுப்பினார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தம்பிக்கு தான் தெரியும். labour market openion வாங்குவதற்கு ரூ.50,000/- கொடுக்க வேண்டும் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. Offer letter வாங்குவதற்கு ரூ.1,00,000/- பணம் கட்டவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும்.

**07.** 1ம் எதிரி உங்கள் தம்பி கணக்கின் மூலமாக அனுப்பிய பணத்தில் ரூ.25,000/- சர்வீஸ் சார்ஜ் ஆக எடுத்துக்கொண்டு மீதமுள்ள பணத்தை 911010043338450 என்ற எண் கொண்ட அல்லாமகேஷ் கணக்கில் செலுத்திவிட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. Jasmin consultancy மூலமாக உங்களுக்கு conformation letter உங்களுக்கு மெயில் மூலமாக வந்தது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என் தம்பிக்கு தான் தெரியும். உங்களுடன் பணம் கொடுத்தவர்கள் Offer letter வந்தவுடன் எதிரியிடம் வேலை வேண்டாம் பணம் தான் வேண்டும் என்று கேட்டார்கள். அது சம்மந்தமாக 1வது எதிரியுடன் பிரச்சனை நடந்தது என்றால் அந்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது. தம்பிக்கு தான் தெரியும்.

**08.** எப்போது புகார் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. புகார் என் தம்பிதான் கொடுத்தார். நீங்களும், உங்கள் அம்மாவும் எதிரி வீட்டிற்கு சென்று பண்த்தை கேட்டெபோது ரூ.50,000/- ஐ உங்களிடம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. உங்கள் அம்மா RDO அலுவலகத்தில் வேலை செய்கிறார்கள், அவர்களுடைய influence ஐ பயன்படுத்தி ரூ.50,000/- பெற்றுக்கொண்டீர்கள் என்றால் இல்லை. என்னுடைய அம்மா வீட்டில் தான் இருக்கிறார்கள். ( house wife). உங்களுடன் பணம் கொடுத்தவர்கள் Offer letter வந்தவுடன் எதிரியிடம் வேலை வேண்டாம் பணம் தான் வேண்டும் என்று கேட்டார்கள். அது சம்மந்தமாக 1வது எதிரியுடன் பிரச்சனை நடந்தது அதற்கு அனுசரணையாக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.